அந்த மக்கள் மத்தியிலிருந்து கோரிக்கை பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கருத்துருவை அரசுக்கு அனுப்பி வைத்தால், இதுபோன்ற நிகழ்வுகளில் பரிசீலனை செய்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

82—

இயற்கை வேளாண்மை

***2886—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தாவர பூச்சிக்கொல்லி மருந்து, பசுந்தாள் உரம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலமாக இயற்கை வேளாண்மையை ஊக்கப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறை மூலமாக தாவர பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் பசுந்தாள் உரம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலமாக இயற்கை வேளாண்மையை ஊக்கப்படுத்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.*

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை பூச்சிக்கொல்லி மருந்துகள்மூலம் வேம்பு உட்பட விஷத் தன்மையுள்ள இலைகளை நம்முடைய முன்னோர்கள் பூச்சிக்கொல்லி மருந்தாகப் பயன்படுத்தி வந்தார்கள். இதனால் விவசாயப் பயிர்களில் உள்ள தீமை செய்யும் பூச்சிகள் விரட்டியடிக்கப்பட்டன. நன்மை செய்யும் பூச்சிகள் பயிர்களைக்*

2012 ஏப்ரல் 12]

காத்துவந்தன. இரசாயன பூச்சி மருந்து பயன்படுத்தினால், சுற்றுச்சூழலுக்கெல்லாம் தீங்கு ஏற்படுகிறது.

அதேபோல, இரசாயன உரத்தில் மணிச் சத்து, சாம்பல் சத்து, தழைச் சத்து ஆகிய மூன்று தாதுக்கள் மட்டுமே உள்ளன. ஆனால், இயற்கை பசுந்தாள் உரத்தில் இரசாயன உரத்தில் இருக்கும் இதே சத்துகளுடன் 16 வகையான தாதுக்கள் உள்ளன. இரசாயன உரம் பயன்படுத்தினால் மண்ணில் இருக்கக்கூடிய நுண்ணுயிர்கள் அழிந்து விடுகின்றன. இதனால் இயற்கை உரத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருட்கள் பல நாட்கள் அழுகாமல் இருக்கின்றன. இரசாயன உரம் பயன்படுத்தி விளைவிக்கக்கூடிய காய்கறி போன்ற விளைபொருட்கள் சீக்கிரம் கெட்டுவிடுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், இரசாயன உரத்தைப் பயன்படுத்தினால் தீமை என்று சொல்லி, கேள்விக்கு வாருங்கள். மானியக் கோரிக்கையில் பேசுவதுபோல மூன்று, நான்கு பக்கங்களை வைத்து இருக்கிறீர்களே!

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: முடித்துவிடுகிறேன். விளைபொருட்களைப் பயன்படுத்தினால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லோருக்கும் தெரியும்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: ஆகவே, வளர்ந்த பல நாடுகள் இயற்கை உர விவசாயத்திற்குத் திரும்பி வருகின்றன. இதில் மண்புழு உரம் சிறப்பிடம் பெறுகிறது. இது இலாபகரமானதுகூட. ஆகவே, இயற்கைத் தாவரப் பூச்சிக்கொல்லி மருந்துக்கும் இயற்கை பசுந்தாள் உரம் பயன்படுத்தி வேளாண்மைத் துறையை ஊக்கப்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறைமூலம் மாநில மற்றும் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், ஐசோபாம், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்ககம்

ஆகிய திட்டங்களின்கீழ் வேப்பெண்ணெய்யை மூலப்பொருளாகக் கொண்ட தாவர பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் சூடோமோனாஸ், டிரைகோடெர்மா விரிடி ஆகிய இயற்கை நுண்ணுயிர் பூஞ்சாணக் கொல்லிகள், என்.பி.வி. என்ற இயற்கை நச்சு உயிரி மற்றும் டிரைகோகிரமா ஒட்டுண்ணி ஆகியவற்றை விவசாயிகள் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகின்றனர்.

மேலும், பசுந்தாள் உரப் பயிர்களான சணப்பை, தக்கைப் பூண்டு, கொளிஞ்சி மற்றும் அகத்தி போன்றவற்றை விவசாயிகள் பயிர் செய்து உபயோகப்படுத்திட அரசு பல்வேறு மானியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தாவரப் பூச்சிக் கொல்லி மருந்து – 2011–2012 ஆம் நிதியாண்டில் 50 சதவிகித மானியத் திட்டங்களுக்கு 32,907 லிட்டர் வேப்பெண்ணெய், உயிரியல் காரணிகளான சூடோமோனாஸ் 48,000 கிலோ, டிரைகோடெர்மா விரிடி 24,000 கிலோ, என்.பி.வி 4,250 லிட்டர், டிரைகோகிரமா கைலோனிஸ் 7,500 சி.சி. ஆகியவை வருடந்தோறும் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத் திட்டத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. பசுந்தாள் உரத்தைப் பொறுத்தவரையில், தக்கைப் பூண்டு, சணப்பை, அகத்தி, அவரை மற்றும் கொளிஞ்சி போன்ற பசுந்தாள் உரங்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக அரசு 250 மெட்ரிக் டன் வேளாண்மைத் துறையின்மூலம் கொள்முதல் செய்து, 25 சதவிகித மானியத்தில் வழங்கி வருகிறது. மேலும், மண்ணின் வளம், அங்கக சத்து ஆகியவற்றை அதிகரிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

முற்பகல் 10–20

அரசு விதைப் பண்ணைகளில், ஆண்டுதோறும் 525 மெட்ரிக் டன் நீலப்பச்சைப் பாசி உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அரசு விதைப் பண்ணைகளில் பசுந்தாள் உரமான அசோலா என்ற தாவரமானது 500 மெட்ரிக் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. பண்ணைக் கழிவுகளைத் தொழுவுரமாக மாற்றி நிலத்தில் இடுவதற்கு 5,000 எண்கள் புளூரோட்டஸ் பூஞ்சாண சிறு பைகள் விவசாயிகளுக்கு விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன. சுமார் 15,000 விவசாயிகளுக்கு அங்கக உரமான மண் புழு உரத்தின் தயாரிப்பு பற்றி 300 செயல் விளக்கப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

உயிர் உரங்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், விலை குறைந்ததாகவும் உள்ள காரணத்தினால், தமிழகத்தில் உள்ள 15 உயிர் உர உற்பத்தி மையங்கள்மூலமாக 3,850 மெட்ரிக் டன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.*

திரு. துரை. மணிவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் தொகுதி, அரியலூர் ஒன்றியம், திருமானூர் ஒன்றியம் போன்ற பகுதிகளில், அதிக விவசாயிகள் கரும்பு சாகுபடியைக் குலத் தொழிலாக செய்து கொண்டிருக்கிறார்கள். போதிய இட வசதி மற்றும் தண்ணீர் வசதி இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியில் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை ஒன்றை நிறுவ, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வி இயற்கை உரத்தைப் பற்றியது, ஆனால், நீங்கள் கரும்பைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இயற்கை உரம் பற்றிய கேள்வியாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்விப் போட்டால், அதற்குரிய பதில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*